மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த உயர் மட்டக் குழுவினுடைய பரிந்துரையின் மீது 1,500 ரூபாய் மானியமாகவும், 1,500 ரூபாய் கடனாகவும் வழங்கப்பட வேண்டுமென்ற அந்தக் கோரிக்கை பம்பாயிலிருந்து கதர் வாரியத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அவர்களிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது. மற்றொன்று, மின் துறைக்கு தரப்படுகிற அந்தக் கட்டணத்தை 0.15 பைசாவாக மாற்ற மின் இலாக்காவை அணுகி இருக்கிறார்கள்.

நெல்லை மாவட்டம் கார்குறிச்சியில் மண்பாண்டத் தொழில் மையம் அமைத்தல்

195—(*வினா எண் 9744) திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் கார்குறிச்சியில் சுமார் 6 லட்சம் மதிப்பீட்டில் மண்பாண்டத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஒரு மையம் அமைக்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இப்பொழுத் தொழிற்கூடம் கார்குறிச்சியில் கட்டுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும், விரைவில் இப்பணிக்கூடம் கட்டி முடிக்கப்படும் எனவும் கதர் கிராமத் தொழில் வாரியத் தலைமைச் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

திருவிடைமருதூர் தொகுதியில் கதர் பாலியஸ்டர் தொழிற்சாலை அமைத்தல்.

196—(*வினா எண் 12034) திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கதர் வாரியத்தின் மூலம் கதர் பாலியஸ்டர் தொழிற்சாலை திருவிடைமருதூர் தொகுதியில் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?